## ஜுன் - 20

**"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."**

**- 1யோவா 2 : 15.**

உலகத்தின் கருத்துக்களுக்கு இசைவாக, நடப்பதும் அதன் வழிகளுக்கு இணக்கமாக இருப்பதுமே உலகத்தோடு ஐக்கியமாயிருப்பதாகும். இந்த அர்த்தத்தில் நாம் அதை நேசிக்காமலிருக்கலாம். ஆனால், அதற்கு வேறாகவும் அதற்கு எதிராகவும் இருக்க வேண்டும். இவ்விதமாக நமக்குக் காண்பிக்கப்பட்டிருக்கிற பாதை குறைந்த பட்சம் சில வழிகளில் கஷ்டமான பாதையும் ஒரு தனியான பாதையுமாக இருக்கிறது. ஆனால், அதுவே சமாதானத்தின், சந்தோஷத்தின் ஒரே வழியாகவும் இருக்கிறது. இந்த உலகமும் அதன் இச்சையும் மிகவேகமாக அழிந்துபோய் கொண்டிருக்கிறாது. அது ஒன்றுமில்லாததும், பொய்யானதும், திருப்திப்படுத்தக் கூடாததும், முடிவில் கேட்டிற்கும், அழிவிற்கும் நடத்துகிறதுமாயிருக்கிறது. ஆனால், கர்த்தருடைய வழியில் மனமகிழ்ச்சியாயிருக்கிறவர்கள் அவரோடு பாக்கியமுள்ள ஐக்கியத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள். உலகம் அறிந்து கொள்ளக்கூடாத ஒரு ஊற்றிலிருந்து அவர்களுக்கு சந்தோஷம் வருகிறது அவர்கள் ஒரு உயர்வான நிலையில் வசிக்கிறார்கள். சுத்தமான காற்றை சுவாசிக்கிறார்கள். உலகம் ஒருபோதும் தரக்கூடாத பரிசுத்தமானதும் இனிமையானதுமான சிநேகத்தை அநுபவிக்கிறார்கள்.

**- Z ’96, 67 (R 1955).**

உலகம், தற்போதுள்ள காரியங்களின் ஒழுங்கைக் குறிக்கிறது. உலகத்திலுள்ளவைகள் இதிலுள்ள பல்வேறு பாகங்களையும் மனோபாவங்களையும் குறிக்கின்றன. இவைகளில் அன்பு கூருவது தீமையோடு அநுதாபங்கொள்ளுவதைக் குறிக்கும். தேவனுடைய எந்த பிள்ளையும் இப்பொழுதுள்ள காரியங்களின் ஒழுங்கோடும் மனோபாவங்களோடும், அநுதாபத்தை வைத்துக்கொண்டு, முக்கியமாக தேவனுடைய அன்பாக இருக்கிற கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாயும் நடத்தப்படுகிறவர்களாயும் இருக்க முடியாது. தெய்வீக அன்பு நம்முடைய நடத்தையை ஆண்டுகொண்டு அடுத்த நேகமத்தில் இருக்கப் போகிற காரியங்களின் ஒழுங்கிற்காக நம்மை வாஞ்சிக்கச் செய்கிறது. நிச்சயமாகவே இது உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூருவதிலிருந்து நம்மை தடுக்கும்.

**-P ’35, 102.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

மத் 6:24; லூக் 14:26; ரோம 12:2; 8:5; கலா 1:4; 6:14; யாக் 4:4,14; 1யோவா 2:16,17; 3:1, 11-18; 4:7-21; சங் 119:37; 39:6; 1கொரி 7:31; 1பேது 1:24; 1கொரி 13.

**கோபுர வாசிப்பு :** Z ’12, 370 (R 5138)

**வினாக்கள் :** உலக சிநேகத்தை என் இருதயத்திலிருந்து தேவ அன்பு எப்படி வெளியேற்றியது? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? பலன்கள் என்ன?